வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# வரலாற்றியல் திறனாய்வு நோக்கில் அர்ச்.சவேரியார் அம்மானை

**லூ.அருண் பிரகாஷ்,**

முனைவர்பட்ட ஆய்வாளர்( (முழுநேரம்), தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

( திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

**ஆய்வுச்சுருக்கம்**

பண்பாட்டையும் வரலாற்றையும் எடுத்துரைக்கும் வரலாற்றுச்சான்றுகளுள் ஒன்றாக இலக்கியமும் அமைகிறது. இலக்கியம் தன்னகத்தே புனைவுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் ஊடாகவும் வரலாற்றியல் கூறுகள் காணப்படுகின்றன. எனவே தான் இலக்கியங்களை வரலாற்றுநோக்கில் ஆராய்கின்ற வரலாற்றியல் திறனாய்வு இன்றைக்கு வளர்ந்து வருகின்ற திறனாய்வுப்போக்காக அமைந்துள்ளது. இத்தகைய திறனாய்வு நோக்கில் அர்ச்.சவேரியார் அம்மானை என்னும் படைப்பின் ஊடாகக் காணப்படும் வரலாற்றியல் கூறுகளைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது. கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக இந்தியாவுக்கு வந்த இறையடியார்களுள் ஒருவரான பிரான்சிஸ் சேவியர் என்னும் புனிதரின் வரலாற்றுப் பதிவுகளைத் தன்னகத்தே கொண்டதாக ஆ.பி.அந்தோனிராசு 1989இல் பதிப்பித்து வெளியிட்ட அர்ச். சவேரியார் அம்மானை அமைகிறது. தென்தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மணியடித்து மக்களைத் திரட்டி அதன்பிறகு தம்முடைய சமயக்கருத்துகளைப் பரப்பிய நடைமுறையைப் பின்பற்றிய புனித சவேரியார் என்னும் மறைபோதகரின் வரலாற்றை இந்த அம்மானையின் வழி கண்டறிய இக்கட்டுரை முற்படுகிறது.

**கலைச்சொற்கள்**

வரலாற்றியல் திறனாய்வு, மறைபரப்புப்பணி, பாளையக்காரர்கள், சிற்றிலக்கியங்கள், புனைவு, வரலாற்றுச்சான்று, திருமுழுக்கு

**முன்னுரை**

இயேசுவின் மறையுண்மைகளை அகிலமெங்கும் பரப்பிடத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து வந்த புனித பிரான்சிஸ் சேவியர் என்பவரே அர்ச்சியஷ்ட சவேரியார் என்று கத்தோலிக்கக் கிறித்தவர்களால் அழைக்கப்படுகிறார். ஸ்பெயின் நாட்டில் பிறந்து இந்தியாவிற்கு வந்த இவர் தமிழகத்தின் கடற்கரை மக்களைக் கிறித்தவம் தழுவச் செய்ததில் பெரும்பங்காற்றினார். மக்களோடு மக்களாகப் பழகி அவர்களுக்குத் தொண்டு செய்த இவரின் வரலாற்றைப் புகழ்ந்துரைக்கும் கிறித்தவச் சிற்றிலக்கியமாக அமைவதே அர்ச். சவேரியார் அம்மானை என்பதாகும். இந்நூலில் ஆசிரியர் ஆ.பிஅந்தோணிராசு அவர்களால் எடுத்துரைக்கப்படுகின்ற சவேரியாரைக் குறித்த செய்யுள்களின் வழி அதில் பதிவுசெய்யப்பெற்றுள்ள கதைத்தலைவர், காலம், இடம், நிலைத்த புகழ் போன்ற வரலாற்றுப் பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**அர்ச். சவேரியார் அம்மானை -அமைப்பும் பொருண்மையும்**

அம்மானை என்பது பெண்கள் தங்கள் கைகளில் வைத்துள்ள மூன்று காய்களுள் ஒன்றை மாற்றி மாற்றி மேலே வீசி இரு கைகளாலும் பிடித்தாடும் வகையில் விளையாடும் விளையாட்டாகும். இப்படி ஆடும்பொழுது அவர்கள் வளையல்கள் ஒலிப்பதும், காதணிகள் அசைவதும் கூந்தல் கலைவதும் அவர்களில் உடலில் வெளிப்படுகின்ற மெய்ப்பாடுகளாகும். இவ்வாறு விளையாடும்போது பாடிக்கொண்டே ஆடுவர். இத்தகைய பாடல்கள் தமிழில் தனி இலக்கிய வகையாக உருவெடுத்துள்ளது. அம்மானை என்பது ‘அம்மா’ என்று பெண்ணை விளிப்பதாகும். அம்மானை என்னும் சிற்றிலக்கியம் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் தமிழில் தோன்றியுள்ள போதிலும், கிறித்தவம் குறித்த பொருண்மை கொண்டதாக மட்டுமே எண்பதுக்கும் மேற்பட்ட அம்மானைகள் காணப்படுகின்றன. இத்தகைய அம்மானைகளுள் ஒன்றாக அர்ச். சவேரியார் அம்மானை அமைந்துள்ளது.

அர்ச். சவேரியார் அம்மானையானது அவரின் வாழ்க்கை வரலாற்றினை இலக்கிய உலகிற்கு தெளிவுபடக் கூறுகின்றது. இந்த அம்மானையானது காப்பு கடவுள் வணக்கம் பாயிரம் வாழி நீங்கலாக இயற்றப்பட்டுள்ளது. மேலும் சவேரியார் அம்மானையில் நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்பு சவேரியார் பிறப்பு, இஞ்ஞாசியாருக்குச் சீடனாதல், வெனிசு நாட்டுப் பயணம், லிஸ்பன் நகரில் தொண்டு செய்தல் கோவா மக்களை நல்வழிப்படுத்துதல் என அறுபத்தி மூன்று உட்தலைப்புகள் கொண்டு உள்ள நிலையில், இக்கட்டுரையில் வரலாற்று அடிப்படையில் ஆய்வு மேற்கொள்வதால் சவேரியாரின் வரலாற்றினையும், அவருடைய பணி பற்றிய செய்திகளையும் அறியமுடிகின்றது.

இதை இயற்றியவர் ஆ.பி. அந்தோணி இராசு 1989 ஜூன் மாதம் இதனைப் பதிப்பித்துள்ளார். இவர் பல கிடைத்தற்கரிய அரிய கிறித்துவ இலக்கியங்களைத் தொகுத்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிய பெருமை ஆ.பி.அந்தோணிராசுவுக்கு உண்டு.

**காப்பு**

தமிழக வரலாற்றில் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதிகளாகப் பாளையக்காரர்கள் என்னும் வரிவசூலித்தல் பணியை மேற்கொண்ட நாயக்கர்கள் பின்னர் தம்மைத் தாமே தன்னாட்சி பெற்ற அரசர்களாக அறிவித்துக்கொண்டனர். அவர்களின் காலத்தில் தெலுங்கு, வடமொழி ஆகியவை பெற்ற முக்கியதுவத்தால் தமிழில் இலக்கியங்களின் வடிவம் மாறுபாடைந்து சிற்றிலக்கியங்கள் என உருவெடுத்தது. 96 வகை எனச் சிற்றிலக்கியங்கள் பொதுவாக வகைப்படுத்தப்பட்டாலும் எண்ணிக்கை குறித்த கருத்தில் சில முரண்பாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பிள்ளைத் தமிழில் காணப்பெறுகின்ற காப்புப் பருவமானது அர்ச்.சவேரியார் அம்மானையில் முதலாவதாகக் காணப்படுகின்றது. குழந்தையை இறைவன் காத்தருள வேண்டிப் பாடுவது காப்பாகும். காப்புப் பருவமானது ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும், பெண்பாற் பிள்ளைத தமிழுக்கும் பொதுவான ஒன்றாகும். "பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் முதல் பருவமாகக் காப்பு

காணப்பெறுகின்றது. பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிறக்கவும், பாட்டுடைத் தலைவன் மேன்மையைக் காப்பாற்றி தரும்படி இறைவனை வேண்டுவது” [1] காப்புப் பருவமாகும்.

இன்றும் “குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் குழந்தைக்குக் காப்பு அணிவிக்கின்ற வழக்கம் உள்ளது. குழந்தையை வழிபடுகின்ற இறைவன் முன்னிடத்தி மஞ்சள் துணியில் நெல், அவரை, துவரை முதலிய தானியங்களை முடித்து அக்குழந்தையின் கையில் காப்பாக அணிவிக்கின்றனர்.”[2] இவ்வாறு பிள்ளைத்தமிழில் காணப்பெறுகின்ற காப்புப் பருவமானது கிறித்துவ அம்மாளனகளில் கடவுள் வாழ்த்திற்கு முன்பாக அமையப்பெற்றுள்ளது. காப்புப் பருவமானது பாட்டுடைத்தலைவனையோ (அ) தலைவியையோ காத்தருளுமாறு இறைவனிடம் வேண்டுவது ஆகும்.

“ஏரிலகு நாவரென்னும் இராட்ச்சியத்தில்

ஏற்றரசர் வங்கிஷத்தில் இனியதாய்த் தோன்றி

வாரிலகு சத்யசபைக் குருவதாகி

வாய்ந்த சிந்து நகரில்வந்து மறைபோதித்த

தாரிலகு பிறஞ்சிஸ்குச் சவேரியாரின்

சரிதையைஅம் மானையதாய்ச் சாற்றிப் போற்ற

காருலவு மலையில்விஸ்வ ரூபமான

கர்த்தனிரு பொற்சரணங் காப்புத்தானே”[3]

எழில்மிகு ஸ்பெயின் தேசத்தில் நவரா என்ற பகுதியில் செல்வச் செழிப்புமிகு குடும்பத்தில் பிறந்த புனித சவேரியார் பொன், பொருள் ஆகியவற்றைத் துறந்து தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் வண்ணம் துறவு வாழ்வினை மேற்கொண்டதையும் மறைபரப்பாளராக கிறித்தவக் கருத்துகளை அகிலமெங்கும் பரப்பிடச் சென்று அவர் செய்த நன்மைகளைக் கூறும் இந்த அம்மானையைப் பாடுகின்றேன் இறைவா! இந்தப் புனிதரின் அம்மானையைப் பாடுகின்ற எம்மை

பேணிக் காத்தருள்வாயாக" என இறைவனை நோக்கி ஆசிரியர் வேண்டுவது போல் இந்தக் காப்புப்பகுதி அமைந்துள்ளது.

அர்ச். சவேரியார் "ஸ்பெயின் நாட்டின் நவார் என்னும் மாவட்டத்தில் பிறந்து, இத்தாலி நாட்டின் பெருமை வாய்ந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான பொலோஞ்ஞா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று 1472ஆம் ஆண்டில் நாட்டின் நிதியமைச்சராகத் திகழ்ந்தார்."[4] மேற்படிப்பு படிக்கின்ற போது இஞ்ஞாசியாருடன் ஏற்பட்ட நட்பால் மனமாற்றம் அடைந்து அனைத்தையும் அறுந்து திருச்சபையை நாடுகின்றார் அர்ச். சவேரியார்.

**கடவுள் வாழ்த்து**

அனைத்திற்கும் தொடக்கமாக இறைவன் திகழ்கிறான். அத்தகைய இறைவனை முதலில் தொழுது பின்னரே தொழில்கனைச் செய்வது வழக்கம். அதனைப் போன்றே சவேரியார் அம்மானையிலும் தொடக்கத்தில் இறைவனை வணங்கி இந்த அம்மானை சிறப்புற அமைந்திட வேண்டும் என ஆசிரியர் பாடுவதாக அமைகின்றது.

"கானாய் அனாதியதாய்த் தக்க அரூபியுமாய்

ஞானதி யாய்ச்சகல நன்மைச் சுரூபியுமாய்

எங்கும் நிறைந்தவனாய் ஏற்றாதி காரணனாய்த்

தங்கி யிருக்கும் சருவேஸ் பரன்பாதம்

நம்பி நமஸ்கரித்து நவாரென்ற ராச்சியத்தில்

சம்பிரம மாய்வாழ்ந்த தார்வேந்தர் வங்கிஷத்தில்"[5]

எங்கும், எதிலும் நிறைந்திருக்கும் இறைவா! ஏற்றமிகு உம் திருப்பாதம் வணங்குகிறேன். செல்வப் பெருங்குடியில் பிறந்து, கிழக்கு வானில் உதித்த சூரியனைப் போல் உலகில் பல்வேறு திசைகளுக்குச் சென்று இறைவனின் வார்த்தையைப் போதித்த புனித சவேரியாரின் வாழ்க்கை வரலாற்றை அம்மானையாகப் பாடிட இம்மண்ணில் எம்மைப் பிறக்கச் செய்த இறைவா! உம்மை வணங்குகிறேன். வெண்மையான தூய உள்ளம் கொண்ட மரியாவின் மகனாய்ப்

பிறந்து, இந்த மண்ணுலகைப் பாவத்திலிருந்து மீட்க வந்த இறைமகனான இயேசுவே உமது திருப்பாதம் வணங்கி உம் அடியேனாகி நான் பாடும் இந்த அம்மானையில் பிழைகள் நீங்கப் பெற்று பொருத்தருள்வாயாக இறைவா !என ஆசிரியர் இறைவனை வேண்டுவது போல் அமைந்துள்ள செய்யுள் கடவுள் வாழ்த்தாக மட்டுமன்றி அவையடக்கமாகவும் அமைந்துள்ளது.

**நாட்டுச்சிறப்பு**

"சீரோங்கு கல்விச் செல்வம் சிறந்தநவா ரென்றுரைக்கும்

பேரோங்கு ராச்சியத்தி னியல்பை யெடுத்தியம்ப

பாரோங்கு கன்னிமரி பாலக னாகப்பிறந்து

காரோங்கு வெற்பில்வந்த கர்த்தன் கழல்பணிவாம்

பாவா யாரமாகப் பாடரிய நாட்டழகை

நாவா யிரமெனினும் நவின்றிடவுங் கூடுமதோ"[6]

சீர்மிகு கல்விச் செல்வமும், எழில் கொஞ்சும் இயற்கை அழகும் ஸ்பெயின் தேசத்தின் இயல்பாகும். உலகம் போற்றுகின்ற அன்னையாம் கன்னிமரியாளின் மகனாகப் பிறந்த கர்த்தரின் பாதங்களைப் பணிவதாக இப்பாடல் அமைகின்றது.

வான் மண்டலத்தில் வீற்றிருக்கின்ற வானக தூதர் கூட்டங்களை அணிஅணியாக நிலைபெறச் செய்ததையும், சங்கீதமென்னும் சப்தம் முழங்க காரிருள் சூழந்து வானின்று மழை பெய்தால் பொங்கிவரும் வெள்ள நீரினால் சூழப்பெற்றதாய்க் குறிஞ்சி நிலம் விளங்கியதையும், அக்குறிஞ்சியில் பாயும் வெள்ளநீரானது முல்லையென்னும் காடு சார்ந்த நிலங்களையெல்லாம் வளம் பெறச்செய்து அதில் வாழும் ஓரறிவு உயிரினங்களான வண்டுகள் ஆர்ப்பரித்து மகிழ்ந்திடச் செய்ததையும், தாவரங்கள் செழிப்புற்று மருதமென்னும் காடுகளை ஆரத்தழுவி வறண்ட நிலங்களையெல்லாம் வளமாக்கிச் செழிப்புற்ற நெய்தல் நிலத்தினை வந்தடையும் போது சந்தனம் மணம் பரப்பியதையும் நாட்டுவளத்தில் காணமுடிகிறது. அதோடு ஆவினங்கள் மடியிலிருந்து வரும் பால் ஆறுபோல் பெருகி ஓடுவதை வருணிப்பதன் வாயிலாக ஸ்பெயின் நாட்டின் செழுமையினை உணரமுடிகிறது.

**நகரச் சிறப்பு**

புனித பிரான்சிஸ் சவேரியார் பிறந்த ஸ்பெயின் நாட்டில் உள்ள நவார் என்னும் நகரத்துச் சிறப்பை அர்ச். சவேரியார் அம்மானை பின்வருமாறு சித்திரிக்கிறது.

“பொற்பாத்திரம் நிறையப் பொருந்து மழுதனவே

நற்பூதலத் துருவர் நகரச் சிறப்பிதனை

சிந்தனையாய்ச் செப்புதற்குச் சென்னாக் கொலுமலையில்

அந்தமுறப் போஸ்தலர்மே லக்கினி நாக்காக வந்த

தற்பரனே யென்னத்தில் தயவோடு வீற்றிருக்க

சொற்றவ றாதேபாடச் சுகிர்தமொழி தந்திடுவீர்”[7]

பொற்பாத்திரத்தில் இருக்கின்ற தேனினும் இனிமையான அமுதினைப் போன்றது ஸ்பெயின் நாட்டின் நவார் நகரம். நீர்வளம் நிறைந்த இந்நகரில் விண்ணை முட்டும் அளவிற்குக் கோபுரங்களும் மாட மாளிகைகளளும் நிறைந்திருந்தன. கோட்டையில் போர் வீரர்களின் உடையழகும், அவர்கள் நடந்து செல்லும்போது ஒலிக்கும் போர் முரசின் அழகும், நாடக நடிகர்களின் நடிப்பழகும் சிறந்து விளங்குகின்றதாகக் கவிஞர் நவார் நகரத்தைச் சித்திரித்துள்ளார். சீர்மிகு நகரத்தின் சிறப்பினை என்னவென்று கூறுவது என்று எண்ணி வியப்புறுவதாக இப்பகுதி அமைகிறது.

நல்லதோர் மாந்தர்கள் வாழும் இந்த தேசத்தில் பிறந்தவர் என்றும் இறைமகள் அக்கினி வடிவாக ஆட்கொண்டதன் விளைவால் அகிலமெங்கும் மறைபரப்புப் பணி செய்திட்ட மாபரன் என்றும் அவரின் திருவுடல் அழியாததால் இறைவனின் மேன்மையை உணர்த்திய உன்னத இறைப்பணியாளர் என்றும் இந்நகரில் பிறந்த சவேரியாரைப் புலவர் புகழ்ந்துரைத்துள்ளார்.

**சவேரியாரின் பிறப்பும் பணியும்**

அர்ச். சவேரியார் அம்மானையின் கதைத்தலைவனாகப் பாடப்பெற்றுள்ள புனித சவேரியாரின் பிறப்பும் இளமைக்கால வாழ்வும் துறவறப்பணியும் இப்படைப்பில் முழுமையாகப் புகழ்ந்துரைக்கப்பெற்றுள்ளன. புனித சவேரியார்

ஸ்பெயின் நாட்டிலுள்ள நவார் என்னும் சிற்றூரில் அமைந்துள்ள சேவியர் கோட்டையில் 1506ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் நாள் ஜான்தேஜாசு மற்றும் டோனாமரியா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

“ஆழி குமிறி அலைசுருட்டி ஆர்ப்பரித்து

சூழும் புவியில் துலங்கும் நகரான

ஏற்ற எகிப்துக் கிராசாவாய் வீற்றிருக்கும்

தோற்றிய பார்வோன் தொடரிசிற வேலர்தன்னை

அடிமை படுத்தி அரசாளும் நாளையிலே..

இடமுற் றதேவன் இரக்க மிகவாகி”[8]

பேரலையில் பொங்கி வரும் நுரைகள் அழகிய கரையினை வருடிச் செல்வது போல், எழில்மிகு நகரான எகிப்து தேசத்தில் பார்வோன் மன்னரின் பிடியிலிருந்து இஸ்ரேயல் மக்களை மீட்டுக் கொண்டு வந்தது போல், ஆமோசுக்கு நெருப்பு வடிவாய் கர்போர் மலையில் முட்புதரில் காட்சியளித்தது போல் மண்ணுலகில் இருக்கின்ற மக்களை மனம் திரும்பி வழிநடத்திச் சென்றிட இம்மண்ணுலகில் உதித்தவர் என புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் பிறப்பு இந்நூலில் வருணிக்கப்பெற்றுள்ளது.

“சவேரியார் தனது 28 வயதில் பாரிசிலுள்ள புனித பார்பரா கல்லூரியல் சேர்ந்து மெய்யியல் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டமும் பெற்றார். பின் அதே கல்லூரியில் பேராசிரியராக நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின் இறையியலைப் பாரிசிலுள்ள செர்போர்ன் பல்கலைக்கழகத்தில் பயின்றார். அப்போது சவேரியாருக்கும் இஞ்ஞாசியாருக்குமிடையே நட்புறவானது புதிதாய் மலர்ந்தது. நட்பின் விளைவால் இஞ்ஞாசியார் சவேரியாரை இறைபணியாற்றிட அழைப்பு விடுத்தார். அதுமட்டுமல்லாமல் சவேரியாரைச் சந்திக்கும் போதெல்லாம் ‘மனிதன் உலகம் முழுதையும் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பாரெனில் அதனால் கிடைக்கும் பயன் என்ன?’ என்னும் திருவிவிலியத்தின் லூக்கா நற்செய்தி வசனங்களை அடிக்கடி கூறிவந்தார். தொடக்கத்தில் இதனைச் சிறிதும் பொருட்படுத்தாத சவேரியார், ஒரு நாள் தனிமையில் இருக்கின்ற போது அதனைச்

சிந்திக்கத் தொடங்கியதன் விளைவால் தன்னை முழுமையாகத் துறவற வாழ்க்கையை மேற்கொள்ள முடிவுசெய்தார்."[9] 1534ஆம் ஆண்டு சவேரியார், இஞ்ஞாசியார் உட்பட ஆறு தோழர்களும் இறைவன் முன் துறவற உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். பின் போர்த்துக்கல் நாட்டு அரசர் ஜான் கிழக்கிந்திய நாடுகளுக்கு கிறித்துவ நம்பிக்கையை பறைசாற்ற மறைப்பணியாளர்கள் கேட்டிருந்த நிலையில் இஞ்ஞாசியாரும் மற்றொருவரும் இந்தியா செல்லவிருந்தனர். அப்பொழுது இஞ்ஞாசியாரோடு பயணம் மேற்கொள்ள இருந்த மற்றொரு நபருக்கு உடல்நிலை மோசமாகவே அவருக்குப் பதிலாக அவ்விடத்திற்கு சவேரியார் அழைக்கப்பட்டார்.

சவேரியார் அவ்வழைப்பினை மனமுவந்து ஏற்றுக்கொண்டு இந்தியாவில் மறைபரப்புப்பணியை மேற்கொண்டதோடு மட்டுமல்லாது ஆலயங்கள் பல கட்டினார். இந்தியாவினைத் தவிர்த்து மலாக்கா, இலங்கை போன்ற அண்டைநாடுகளுக்கும் சென்று மறைபரப்புப்பணியை மேற்கொண்டார். இறுதியாக சீனா நோக்கிய பயணத்தின்போது சான்சயான் தீவில் தனது பணியை மேற்கொள்கிறபோது உடல்நலம் குன்றி இறந்தார். இவரது திருவுடல் கோவாவிலுள்ள பாம் ஜீசஸ் தேவலாயத்தில் இன்றளவும் மக்களுக்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு புனித சவேரியாரின் முழுமையான வரலாறு இந்நூலில் பதிவுசெய்யப்பெற்றுள்ளது.

**இந்திய நாட்டில் மறைபரப்புப்பணி**

கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக இந்தியாவுக்கு வந்த புனித சவேரியார் கோவாவில் கால்பதித்தார். அங்கு மறைப்பணி ஆற்றிய அவர் பின்னர் தென்னகத்தின் நுழைவு வாயிலாகத் திகழ்கின்ற "தூத்துக்குடி அருகிலுள்ள பழைய காயல் என்னும் ஊருக்கு வந்து அங்கிருந்து தனது மறைபரப்புப் பணியைத் தொடங்கினார்."[10] பின்னர் கடற்கரைக் கிராமங்களில் பயணம்மேற்கொண்டு தன்னுடைய பணியைத் தொடர்ந்தார். இத்தகைய மறைபரப்புப்பணியும் இந்நூலில் பதிவுசெய்யப்பெற்றுள்ளது.

"தேவனு தவியினால் திகழ்சவே ரியார்முனிவன்

கோவை நகரிருக்குங் குடிகளனேகருக்கு

கொண்டி ருந்தவீனக் குசமசக் கொல்லாமகற்றி

அண்ட ருலகோ னருளை யவர்க்குணர்த்தி”[11]

மறைபரப்புப் பணியால் மனம் திரும்பிய மக்களுக்கு திருமுழுக்கு வழங்கி, அவ்வூரில் ஆலயங்களும் கட்டினார். மேலும் அந்தணர்களுக்குக் கிறித்தவத்தைப் போதித்ததோடு அவர்களைத் திருமறையில் சேர்க்கவும் செய்தார். குருத்துவப்பணிக்கு மாணவர்களைத் தேர்வுசெய்து பயிற்சிக்காக அவர்களைக் கோவாவிற்கு அனுப்பி வைத்தார். அருகிலிருந்த குருக்களை தன்னோடு மறைபரப்பு பணியில் ஈடுபடச்செய்தார். மனமாற்றம் அடைந்து வந்த மக்களை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு அக்காலத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகளால் புறக்கணிக்கப்பட்டிருந்த மக்களைக் கிறித்தவம் தழுவச் செய்ததோடு அவர்களுக்கான சமத்துவத்தை வழங்கவும் முற்பட்டதை இந்நூல் பதிவு செய்துள்ளது.

**இலங்கையில் மறைபரப்புப்பணி**

இந்தியாவில் மட்டுமன்றி இவர் இலங்கை போன்ற அண்டைநாடுகளிலும் மறைபரப்புப்பணியை மேற்கொண்டார். இவ்வாறு அவர் மேற்கொண்ட மறைபரப்புப்பணியை இலங்கையின் நிலவியல் பின்னணியில் கவிஞர் சித்திரித்துள்ளார்.

“சுத்த மெய்ஞானச் சுடராய் விளங்கிநிற்கும்

சதய மறைக்குரவன் சவேரிய ரானவரும்

பொன்னா ரிலங்கையிலும் போர்ந்த மன்னார்த்தீவிலும்

துன்னு மனேகர் தொடர்வேத சாட்சிகளாய்

வீந்தாலு மவ்விடத்தில் மென்மேலு மேசனங்கள்

வாய்ந்த மறையதனை வெளவியே சேர்வதனால்”[12]

இலங்கையை அடுத்த மன்னார் தீவில் சவேரியாரின் மறையுரையைக் கேட்டு, அவர் தங்கள் தீவுக்கு வருமாறு அழைப்பு விடுத்த நிலையில் “சவேரியார் ஒரு குருவை

மட்டும் அவரது சார்பாக அனுப்பிவைத்தார். அந்தக் குருவின் மறையுரையைக் கேட்டு மனமாற்றமடைந்தவர்களை இலங்கை மன்னன் கொலை செய்தான். அவர்களை மன்னார் மறைசாட்சிகள் என்று இன்றும் அழைப்பர். அதன்பின் அங்கு நேரடியாகச் சென்ற சவேரியார் மக்கள் பலரைச் சந்தித்து மனமாற்றம் அடையச் செய்தார்."[13] இந்த நிலையில் மன்னாரில் தீராத கொடிய நோய் பரவிடவே அவர்கள் சவேரியாரை நாடினர். அவரோ இறைவேண்டல் புரிந்து அக்கொள்ளை நோயிலிருந்து மக்களை மீட்டதாகவும், இதனால்நலம் பெற்ற சிலர் கிறித்தவர்களாக மாறியதாகவும் இந்நூலில் வரலாற்றுக் குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன.

**மரணத்தை முன்னறிவித்தல்**

உலகமெங்கும் சென்று மறைபரப்புப்பணியினை மேற்கொண்ட புனித சவேரியார் மீண்டும் இந்தியாவிற்கு வந்தார். தனது இறுதி நாட்களை முன்பே அறிந்தவராய் சீன நாட்டு மொழிபெயர்ப்பாளருடன் இணைந்து சீனநாட்டிற்கு பயணம் மேற்கொண்டார். அப்போது சவேரியாருக்கு ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக சான்சயான் தீவில் இறக்கி விடப்பட்டார். இந்த தீவில் வீசிய குளிர்ந்த காற்றின் விளைவால் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமான நிலையில், 1553ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாள் சவேரியார் மரணத்தைத் தழுவினார்."இறைவா உம்மை நம்பியுள்ள எம்மைக் கைவிடாமல் காப்பாற்றும்"[14] என இறைவனிடம் மன்றாடியவாறு இறைவனடி சேர்ந்தார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

"சோதிக்கதிர் பரப்பித் தோற்றிய கந்தொளிசெய்
ஆதித்தனா னதுபோய் அஸ்தமிக்கும் வா
சத்தியத்தின் வித்தான சவேரியா ரானகுரு
உத்தமமாய்த் தானுதித்த உயர்ந்த நவாரைவிட்டு
சிந்து நகரெங்குஞ் சென்றே மறைபயிற்றி
சந்த முலவுகின்ற சஞ்சியான் தீவுதன்னில்"[15]

**அழியா திருவுடலைக் கோவாவிற்குக் கொண்டு வருதல்**

மறைபரப்புப்பணி மேற்கொண்டுவந்த சவேரியார் மலாக்காவுக்கு அருகிலுள்ள சான்சயான் தீவில் உடல்நலக் குறைவால் இறந்தார். அவரது உடல் மலாக்காவில் புதைக்கப்பட்டு ஆறு வாரங்களுக்குப் பின் தோண்டப்பட்டபொழுது அவரின் திருவுடலானது அழியாமல் இருந்தது. இதனால் தோண்டியெடுக்கப்பட்ட அவரின் உடல் மலாக்காவிலுள்ள ஓர் ஆலயத்தில் இரண்டாம் முறையாக அடக்கம் செய்யப்பெற்றது. பின்னர் 1553ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 இல் கோவாவிற்கு சவேரியாரின் அழியாத் திருவுடல் கொண்டு வரப்பட்டு பாம் ஜீசஸ் தேவாயலத்தில் ஆலய மணிகள் ஒலிக்க ராஜ மரியாதையுடன் அவரது திருவுடல் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியைக் கவிஞர் பின்வருமாறு இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

"நயங்கொள் கிறிஸ்தவர்கள் நற்சவேரி யார்முனிவன்
வயங்குஞ் சரீரமதை மலாக்கா நகரைவிட்டு
பாரிலுயர் கோவைப் பட்டணங் கொண்டேகுதற்கு
சீரியவெண் ணமுற்றார் சிறந்தத் துறைவிட்டு
பாரிய வேலைதன்னில் பழுதாக வேயிருந்த"[16]

**தொகுப்புரை**

இலக்கியத்தின் வெளிச்சத்தில் வரலாற்றைத் தேடுவதாக அமைவது வரலாற்றியல் திறனாய்வாகும். இத்தகைய திறனாய்வைக் கொண்டு ஆ.பி. அந்தோணி ராசு இயற்றிய அர்ச். சவேரியார் அம்மானையை ஆய்வுக்கு உட்படுத்தினால் 16ஆம் நூற்றாண்டின் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளைக் கண்டறியமுடியும். புனித சவேரியார் என்னும் கத்தோலிக்கக் குருவின் பெருமைகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ள பாடல்கள்வழி அவர் பிறந்த ஸ்பெயின் நாடு, நவார் நகரம், குடும்பம் ஆகிய பிறப்பு சார்ந்த செய்திகளும், அவரின் துறவறவாழ்க்கை, மறைபரப்புப்பணிகள் தொடங்கி அவரின் மரணம், இன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அவரின் உடல் வரை புனித சவேரியாரின் வாழ்க்கைவரலாற்றுச் செய்திகளும் இந்நூலில் பதிவு

செய்யப்பெற்றுள்ளன. இவ்வாறு கதைத்தலைவனின் வாழ்க்கை வரலாறு மட்டுமன்றி அக்காலச் சமூகத்தின் வரலாறு இடையிடையே இந்நூலில் பதிவு செய்யப்பெற்றுள்ளதால் புனிதரின் வரலாற்றை வாசகரால் பின்புலத்தோடு உணரமுடியும் என்பது உண்மை.

**சான்றெண் விளக்கம்**


1.இரா. இராமகிருஷ்ணன் சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம், சாரதா பதிப்பகம் சென்னை ப.356

2.கு.முத்துராசன் பிள்ளைத்தமிழ் இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் முதற்பதிப்பு 1984 ப.22

3.ஆ.பி.அந்தோணிஇராசு(தொகு.) அர்ச்.சவேரியார் அம்மானை வாத்துக்காரத்தெரு திருச்சி ப.1

4. மாம்பரா புனித சவேரியார், வைகறை பதிப்பகம், திண்டுக்கல முதற்பதிப்பு 2005 ப.13

5. ஆ.பி.அந்தோணிஇராசு(தொகு.) மு.நூ.ப.1

6.மேலது ப.8

7.மேலது ப. 11

8.மேலது ப. 15

9. ஆர்.எஸ். அமல்ராஜ் புனிதர்கள் பாதையில், வைகறை பதிப்பகம், திண்டுக்கல், முதற்பதிப்பு 2001 ப.329

10.மேலது, ப.330

11.மேலது, ப.53

12.மேலது, ப.75

13.ஜெயபாண்டியன் புனித சவேரியார் நாஞ்சில் பதிப்பகம் நாகர் கோவில் முதற்பதிப்பு2001 ப.38

14.மேலது ப.42

15. மேலது ப.140

16.ஆ.பி. அந்தோணி இராசு,மு.நூ. ப.150